**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.462/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **திருமதி.பிரியா** |
| Father's Name/Husband Name: | **திரு.சிவகுமார்** |
| Village : | **கரம்பியம்** |
| Taluk : | **குன்னம்** |
| Age : | 27 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24 .06.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(1, 4, 5 மற்றும் 8 எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இல்லதரசியாக இருக்கின்றேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்குப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் பெற்றோர்தான் புகார் அளித்துள்ளனர். புகார் யார் மீது, எதற்காக அளித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. புகார்ரை யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. வெள்ளைதாளில் கையொப்பம் போட்டேன். புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1 ஆக** குறியீடுசெய்யப்பட்டது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) போலீசார் தன்னை விசாரித்ததாகவும் போலீசார் விசாரணையில் கடந்த 07.02.2013ம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு முதலாம் எதிரி தன்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் மற்றம் 4,5 மற்றும் 8 எதிரிகளுடன் சேர்ந்து கலகம் செய்யும் நோக்கத்தோடு தன்னுடைய வீட்டிற்குள் நுழைந்ததாகவும் எதிரிகளுக்கு ஆதரவாக கலகம் செய்யும் நோக்கத்தோடு செயல்பட்டதாக கூறிவிட்டு தற்போது தனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) புகாரை போலீசார் எழுதினார்கள் என்றால் சரிதான். வெள்ளைதாளில் தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.